பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 19 | வெள்ளிக்கிழமை | 02.02.2024 | அதிர்வு 185

## இணையம், தொலைபேசி ஊடாக போதை வர்த்தகம்

### ஒரே நாளில் 316 பேர் கைது

இணையம் மற்றும் தொலைபேசி ஊடாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 316 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதிலும் நேற்று 06



# இலங்கையில் தேர்தல் ஒன்று விரைந்து நடத்தப்பட வேண்டும்

## இந்தியத் தூதுவருடனான சந்திப்பில் சந்திரிகா அம்மையார் வலியுறுத்து

**“இலங்கையில் தற்போது சீரற்ற ஆட்சியே தொடர்கின்றது. மக்கள் ஆணையுடைய சீரான ஆட்சி இடம்பெற வேண்டுமெனில் தேசிய தேர்தல் ஒன்று விரைந்து நடத்தப்பட வேண்டும்.”**

**- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தினார்.** 06

# நாட்டில் ஜனநாயகத்துக்குப் பதிலாக சர்வாதிகார ஆட்சியே நடக்கின்றது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடும் சீற்றம்

நமது நாட்டில் ஜனநாயக ஆட்சிக்குப் பதிலாக சர்வாதிகார ஆட்சியே நடக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 75 ஆவது கட்டமாக மாத்தறை அத்துரலிய ஜே.ஆர்.எஸ்.அல்மேதா மகா வித்தியாலயத்திற்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 06



# மொட்டுக் கட்சிக்கு தற்போது 30 சதவீத வாக்குகளே உண்டு

## தம்மிக்க எம்.பி. வெளிப்படைக் கருத்து



“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியே தற்போது ஆட்சியில் இருக்கின்றது. எனினும், இந்தக் கட்சிக்குத் தற்போது 30 சதவீதமான வாக்குகளே உள்ளன. கட்சி பிளவுபட்டால் வெற்றி இலக்கை நோக்கி நகர முடியாமல் போகும்.” 06




தமிழரசுக் கட்சியின் உள்ளகக் குழப்பங்களைத் தீர்க்கும் முயற்சியாக, கட்சியின் புதிய தலைவராகத் தெரிவாகியிருக்கும் சிறீதரன் எம்.பி. நேற்று முன்தினம் முன்னிரவில் மட்டக்களப்புக்குச் சென்றிருந்தார்.

அங்கு சிறீநேசன் வீட்டில் சுமார் ஓரிரு மணித்தியாலங்கள் மந்திராலோசனை நடந்தது. யோகேஸ்வரன், அரியநேத்திரன், சிறீநேசன் ஆகியோருடன் அம்பாறையில் இருந்து கோடீஸ்வரனும் வந்து 06



# ஜெனரல் தயா ரத்நாயக்க சஜித்தின் கட்சியுடன்தான்

## ஐக்கிய மக்கள் சக்தி தெளிவுபடுத்தியது

நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்ட முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க பின்னர் மவ்பிம ஜனதா கட்சியில் இணைந்து கொண்டுள்ளார் என சமூக வலைத்தளங்களில் செய்தியொன்று பரவி வருகின்றது. இது பொய்யான செய்தி என்பதோடு, அவ்வாறானதொரு சம்பவம் நடக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகிறோம்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி ஓர் அறிக்கை மூலம் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாகப் பகிரப்பட்டு வரும் படம் பழையது என்பதோடு, இதுபோன்ற படத்தைப் பயன்படுத்தி அரசியல் பிரசாரம் செய்து வருவதையும் வன்மையாக கண்டிக்கிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பலப்படுத்துவதற்காக பல்வேறு தரப்பினரும் ஒன்றிணைவதால், இவ்வாறான போலிப் பிரசாரங்கள் எதிர்காலத்திலும் இடம்பெறலாம். இது தொடர்பாக நாம் கடும் அவதானத்துடன் இருப்போம்.

இவ்வாறான படங்களை வெளியிடுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தரப்பைச் சேர்ந்த ஜெனரல் தயா ரத்நாயக்கவிடமே விசாரித்திருந்தால்,அது சிறந்த ஊடக நடைமுறையாக இருந்திருக்கும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். – என அக் கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆரம்பப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு மார்ச் மாதம் முதல் இலவச மதியநேர உணவு

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

2024 மார்ச் மாதம் முதல் தரம் 1-5 வரை உள்ள ஆரம்பப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு தினசரி இலவச மதிய நேர உணவு வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இளம் மாணவர்களின் ஊட்டச்சத்து தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சுமார் 16 லட்சம் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம், அரசாங்கம் இதற்காக 1600 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை நேரங்களில் ஒவ்வொரு மாணவரும் போஷாக்கான உணவைப் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை அமைச்சர் வலியுறுத்தினார்.

மதிய உணவு வழங்குவதற்கான தினசரி ஒரு மாணவருக்கு 110 ரூபா ஒதுக்கீடு என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திட்டம் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வு மற்றும் கல்விச் செயல்திறனுக்கு பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், எதிர்வரும் கல்வியாண்டுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டிற்குத் தேவையான அனைத்துப் பாடசாலை பாடப்புத்தகங்களும் அச்சிடப்பட்டு விநியோகத்திற்குத் தயாராக உள்ளன என அவர் உறுதிப்படுத்தினார்.

மேலும், மூன்றாம் தவணை முடிவடைந்தவுடன் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள் உடனடியாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.



# யாழ். மாவட்டத்தில் ஜனவரி மாதம் 2,500 பேருக்கு டெங்குத் தொற்று

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2024 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் மட்டும் 2,500 பேர் டெங்குத் தாக்கத்திற்கு இலக்காகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலேயே தற்போது அதிக டெங்குத் தாக்கம் நிறைந்த மாவட்டமாக யாழ்ப்பாணம் மாவட்டம் உள்ள நிலையில் இந்த ஆண்டின் முதல் மாதத்தில் மட்டும் 2 ஆயிரத்து 500ற்கும் மேற்பட்டோர் டெங்குத் தாக்கத்திற்கு இலக்காகியுள்ளனர்.

இதில் யாழில் உள்ள 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் அதிக பட்சமாக யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பரப்பிற்குள் மட்டும் ஜனவரி மாதம் 750 பேர் டெங்கு நோய்க்கு இலக்காகியுள்ளனர்.

இதேநேரம் குடாநாட்டில் இரண்டாவது தாக்கம் நிறைந்த பகுதியாக கரவெட்டியில் 194 பேர் டெங்கு நோய்க்கு இலக்காகியுள்ளனர்.

3 ஆவது பிரதேசமாக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு காணப்படுகின்றது.

இதேநேரம் டெங்கின் தாக்கம் உடன் கட்டுப்படும் ஏது நிலையும் காணப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# ஜனக ஶ்ரீசந்திரகுப்தவுக்கு மீண்டும் விளக்கமறியல்!



தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் கைதாகியுள்ள சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஶ்ரீசந்திரகுப்த உள்ளிட்ட 7 பேர் மீள விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதிவான், எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இந்த நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# கொள்கைப் பிரகடனம் மீது 8,9 ஆம் திகதிகளில் விவாதம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைக்கவுள்ள அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மீதான விவாதத்தை இரண்டு நாள்கள் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 8 ஆம் மற்றும் 9 ஆம் திகதிகளில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மீதான விவாதத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

9 ஆவது நாடாளுமன்றத்தின் 5 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை நாடாளுமன்றத்தில் சம்பிரதாயபூர்மாக நிகழ்த்தவுள்ளார்.

# ஆர்ப்பாட்டத்தின் மீது தாக்குதல் நடத்தியமைக்கு சட்ட நடவடிக்கை என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி



**"நீதிமன்ற உத்தரவுகளை மதித்து மேற்கொள்ளப்பட்ட எமது ஆர்ப்பாட்டத்தின்மீதே பொலிஸார்தாக்குதல்மேற்கொண்டனர். அதனால், இந்த தாக்குதலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து வருகிறோம்."**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி அரசியல் குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் பி பெரேரா தெரிவித்தார்.**

வற் அதிகரிப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் மீது பொலிஸார் மேற்கொண்டிருந்த தாக்குதல் தொடர்பில் எடுக்க இருக்கும் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"வற் அதிகரிப்பு மற்றும் பொருள்களின் விலை அதிகரிப்பினால் மக்கள் எதிர்கொண்டுவரும் சிரமத்தைக் குறைப்பதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

எமது ஆர்ப்பாட்டத்தை தடுப்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன் பொலிஸார் நீதிமன்றம் சென்று சில இடங்களுக்கு பிரவேசிக்காமல் இருப்பதற்கான தடை உத்தரவுகளையும் பெற்றிருந்தனர்.

அதன் பிரகாரம் நாங்கள் எமது ஆர்ப்பாட்டத்தை பேரணியாக முன்னெடுத்தபோது, நீதிமன்றம் தடை விதித்திருந்த எந்தப் பிரதேசத்துக்கும் நுழையவில்லை. கொழும்பு தர்மபால மாவத்தை தடை செய்யப்பட்டிருக்கவில்லை.

தர்மபால மாவத்தையில் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை நேரடியாக இலக்குவைத்து பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர்.

இது ரணில் ராஜபக்ஷ அரசாங்கத்தின் இயலாமையை மறைப்பதற்கும் அடக்குமுறையை உறுதிப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலாகும்.

சட்டத்துக்கு உட்பட்டு ஆர்ப்பாட்டம், போராட்டம் மேற்கொள்ள அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், எமது அடிப்படை உரிமையை மீறியமை தொடர்பில், இந்தத் தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் எதிராகவும் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடுக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்." – என்றார்.



# ரணிலின் வீட்டுக்கு தீ வைத்தவர் கைது

கடந்தகால "அறகலய" போராட்ட சமயம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு தீ வைத்தார் எனக் கூறப்படும் சந்தேகநபர் ஒருவரை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொட்டதெனிய பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிபவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சியில் கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு படுகாயம்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவரைப் பிடிக்க முற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கட்டுத் துவக்குச் சூட்டிற்கு இலக்காகியுள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட கோரமோட்டை பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி இடம் பெறுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அப்பகுதிக்குச் சென்ற தர்மபுரம் பொலிஸார் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபரை கைது செய்ய முற்பட்ட வேளை சந்தேக நபர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

தப்பியோடிய சந்தேக நபரைத் துரத்திச் சென்றவேளை மிருக வேட்டைக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுதுவக்கு வெடித்ததிலேயே 37 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயம் அடைந்தார். அவர் தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இலங்கை மின்சார சபையின் சட்டச் செலவுகள் அதிகரிப்பு

அமைச்சரவையின் தீர்மானத்திற்கு எதிராக தனியார் சட்டத்தரணிகளை பயன்படுத்தியதன் காரணமாக இலங்கை மின்சார சபையின் சட்டச் செலவுகள் அசாதாரணமாக அதிகரித்துள்ளன என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சின் விடயத்திற்கு பொறுப்பான செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தனவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

அரச நிறுவனமொன்றின் உத்தியோகத்தர், தனியார் சட்டத்தரணிகளின் சேவையைப் பெறுவதற்கு அரசாங்கப் பணத்தை செலவிட்டால், அந்த பணத்தை உரிய அதிகாரியிடமிருந்து தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியல் சங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், கடந்த வருடத்தில் பெரும்பாலான வழக்குகளில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சேவைகளை பெற்றுக் கொள்ளாமல், தனியார் சட்டத்தரணிகளின் சேவையை சபை பெற்றுக்கொண்டுள்ளதாக பொறியியலாளர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மின்சார சபை, 130 மில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகையை சட்டத்தரணி கட்டணமாக செலுத்தியுள்ளது.

இந்த தொகையானது 2015 மற்றும் 2021 இற்கு இடைப்பட்ட 6 ஆண்டு காலப்பகுதியில், சட்டக் கட்டணத்திற்கு செலவளித்துள்ள மொத்தச் செலவை விட அதிகமானது என பொறியியலாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையின் தலைவர் என்.எஸ். இலங்கக்கோன் தெரிவிக்கையில், அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய தனியார் சட்டத்தரணிகளின் சேவைகள் பெறப்பட்டன என்றார்.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய, தனியார் சட்டத்தரணிகளின் சேவைகள் பெறப்பட்டால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையே அங்கு பின்பற்றப்பட்டுள்ளன என அதன் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின்

# பொதுச்செயலர் பதவியிலிருந்து அமரவீர, சுமதிபால இராஜினாமா!



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து விலகுவதாகத் தெரிவித்து அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் திலங்க சுமதிபால ஆகியோர் இராஜினாமாக் கடித்தைக் கையளித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கமையவே இந்த இராஜினாமாக் கடிதம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பொதுச்செயலாளர் பதவி வகித்த நிலையில் அமைச்சர் மஹிந்த அமரவீர அரசுடன் இணைந்துகொண்டு அமைச்சுப் பதவியையும் பொறுப்பேற்றமை கட்சியின் நிலைப்பாட்டுக்கு முரணானது எனத் தெரிவித்து அவரைப் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கக் கூட்டணியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதன் பிரகாரம் அமைச்சர் மஹிந்த அமரவீரவை நீக்கியதன் மூலம் வெற்றிடமான பொதுச்செயலாளர் பதவிக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால நியமிக்கப்பட்டார்.

இந்தத் தீர்மானத்துக்கு எதிராக மஹிந்த அமரவீர நீதிமன்ற நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், பொதுச்செயலாளர்கள் இரண்டு பேரையும் ஏற்றுக்கொள்வதில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

இந்தப் பிரச்சினை காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியாக எந்த நடவடிக்கையும் முன்னெடுத்துச் செல்ல முடியாத சிக்கல் நிலை ஏற்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேலும் பல கட்சிகளுடன் ஒன்றிணைந்து புதிய கூட்டணியொன்றைக் கட்டியெழுப்ப தற்போது கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பெயரைப் பயன்படுத்தப் பிரேரிக்கப்பட்டிருந்தபோதும் இந்தப் பொதுச்செயலாளர் பதவி பிரச்சினை அதற்குத் தடையாக அமைந்தது.

அதனால் இந்தத் தடையை நீக்கிக்கொள்வதற்காகவே மஹிந்த அமரவீர மற்றும் திலங்க சுமதிபால ஆகிய இருவருக்கும் இந்தப் பதவியில் இருந்து நீங்கிக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளக வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

கலந்து கொண்டிருந்தார்.

பொதுச் செயலாளர் பதவியை ஒரு வருடம் குகதாசனும், ஒரு வருடம் சிறீ நேசனும் பகிர்ந்து கொள்வது உட்பட பல்வேறு திட்டங்கள் குறித்து பேசப்பட்டதாகத் தெரிகின்றது. அப்படித் தீர்மானித்தால் முதல் வருடம் சிறீநேசனுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கூட்டத்தில் கேட்கப்பட்டது.

எது குறித்தும் தீர்க்கமான முடிவோ, பதிலோ சிறீதரன் தரப்பில் இருந்து வழங்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

எதிர்வரும் பத்தாம் திகதி சிங்கப்பூரிலிருந்து மாவை சேனாதிராஜா திரும்பிய பின்னர், அடுத்த நாள் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பழைய மத்திய குழுவை கூட்டி, இதுகுறித்து ஆராயலாம் என்று ஒரு யோசனைத் திட்டம் தீர்மானிக்கப்பட்டதாக ஒரு வட்டாரம் தகவல் வெளியிட்டது.

அப்படிக் கூட்டத்தைக் கூட்டுவது என்று தீர்மானித்தாலும் அந்தக் கூட்டத்தை கூட்டும் அதிகாரம் சட்டப்படி யாருக்காவது இருக்கின்றதா என்று தெரியவில்லை.

கட்சியின் பதில் பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கம் சுகவீனத்தில் இருக்கின்றார். அவரது இடத்துக்குப் பதிலாகச் செயற்பட வேண்டிய அந்த மத்திய குழுவின் பிரதிப் பொதுச் செயலாளர் சுமந்திரனோ அண்மையில் கட்சித் தலைவர் சிறீதரனுக்கு எழுதிய கடிதத்தில் தம்மை 'முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளர்' என்றே குறிப்பிட்டு ஒப்பமிட்டிருக்கின்றார். அதன்படி - அவரின் கருத்தின்படி - அந்த மத்திய குழுவின் நிர்வாகக் காலம் முடிவடைந்து விட்டது. புதிய நிர்வாகக் குழு அதிகாரத்துக்கு வந்து விட்டது.

அப்படியான நிலையில் பழைய மத்திய குழுவின் கூட்டத்தைக் கூட்ட அவர் - சுமந்திரன் - முன்வருவாரா, இணங்குவாரா என்று கேள்வி உள்ளது.

பழைய மத்திய குழு கூடுவதற்கு, அது இன்னும் செயற்பாட்டில்தான் உள்ளது என்ற தீர்மானத்தை நிர்வாகச் செயலாளர் குலநாயகமும் ஏற்றுக் கொள்வாரா என்பதும் தெரியவில்லை.

எனினும், பழைய மத்திய குழுவை உத்தியோகப்பற்றற்ற நிலையில் மாவை சேனாதிராஜாவோ, சிறீதரனோ தனிப்பட்ட முறையில் எல்லோரையும் ஓரிடத்திற்கு அழைத்து, கூட்டி, ஆலோசனை நடத்த முடியும். ஆனால், அந்தக் கூட்டத்துக்கும், அதன் முடிவுக்கும் உத்தியோகபூர்வ அந்தஸ்து நிலை இருக்குமா என்பது கேள்வியே.

அத்தகைய கூட்டத்தில் சிறீதரனின் முயற்சியில் ஏதேனும் இணக்கம் வந்தாலும், அதைச் சட்டரீதியான முடிவாக அங்கீகரிப்பதில் சிக்கல் இருக்கலாம்.

சுமந்திரன் தரப்பின் நிலைப்பாடும், வெளிப் பொதுக்கருத்தும் தமிழரசு கட்சியின் முன்னைய மத்திய குழுவினதும் மற்றும் பொதுக்குழுவினதும் தேசிய மாநாட்டை ஒட்டிய கூட்டங்கள் நடந்து முடிந்து விட்டன. உத்தியோகத்தர் தெரிவும் முடிந்துவிட்டது.

இனி பாக்கியாக - நிலுவையாக - இருப்பது சம்பிரதாயபூர்வ அமர்வான தேசிய மாநாட்டின் பொது அமர்வு மட்டுமே.

அதுதான் நிலைமை என்றால் இன்னொரு முக்கிய பிரச்சினை உண்டு.

வருடாந்ததேசியமாநாட்டைநடத்தி,தேர்தல் ஆணையத்தின் தேவைப்பாட்டை நிறைவு செய்வதென்றால், அதில் முக்கியமான விடயம் கட்சியின் வரவு - செலவு அறிக்கையை தணிக்கை செய்து, மத்திய குழு மற்றும் பொதுக்குழுவில் சமர்ப்பித்து, அங்கீகாரம் பெறுவதும், பின்னர் அதனை பொது அமர்வு சமயத்தில் வெளியிடுவதுமாகும்.

ஆனால் கட்சியின் மத்திய குழுவினதும், பொதுக்குழுவினதும் அமர்வுகள் முடிந்து விட்டன, அவற்றில் வரவு - செலவு அறிக்கை விடயம் இன்னும் எடுக்கப்படவில்லை.

அது சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகரிக்கப் படாவிட்டால் அந்தத் தேசிய மாநாடு தேர்தல் ஆணையத்தின் தேவைப்பாடுகளை நிறைவு செய்த ஒரு மாநாடாக அமையாது.

இந்தப் பிரச்சினைக்கு மாவை - சிறீதரன் - சுமந்திரன் போன்ற தரப்பினர் எப்படி தீர்வு காணப் போகின்றனர் என்பது தெரியவில்லை.

இடியப்பச் சிக்கலுக்குள் சிறீதரன் மாட்டி இருக்கிறார் என்பது மட்டும் திண்ணம்.

தாம் சிக்கிய சக்கர வியூகத்திற்குள் இருந்து சிறீதரன் எப்படி மீண்டு வருவார்? காலம் பதில் கூறட்டும்.

## இலங்கையில் தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் சந்தோஷ் ஜாவை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளில் அண்மையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நான் பல தடவைகள் சந்தித்துள்ளேன். அவ்வேளைகளில் இலங்கை தொடர்பில் இந்தியாவின் கரிசனைகளுக்கு நன்றி தெரிவித்துள்ளேன். இலங்கையின் முன்னேற்றத்துக்கு இந்தியாவின் உதவிகள் தொடர்ந்தும் கிடைக்க வேண்டும். இந்தியாவுக்கு இலங்கை எப்போதும் நன்றிக் கடனாக இருக்கும். இலங்கையின் உயிர் நண்பனாக இந்தியாவும், இந்தியாவின் உயிர் நண்பனாக இலங்கையும் இருக்க வேண்டும்." - என்று மேற்படி சந்திப்பில் சந்திரிகா அம்மையார் எடுத்துரைத்தார்.

## மொட்டுக் கட்சிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

- இவ்வாறு ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேலைத்திட்டத்தை நான் முன்வைத்துள்ளேன். என்னை வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பில் கட்சியே முடிவெடுக்க வேண்டும். இலங்கையில் மிகப் பெரிய கட்சியாகக் கருதப்பட்ட ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குத் தற்போது நூற்றுக்கு 30 வீதமான வாக்குகளே உள்ளன. கட்சிக்குள் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. எனவே, 51 வீதம் வாக்குகளைப் பெறக்கூடிய வேட்பாளர் ஒருவரே நிறுத்தப்படுவார் எனவும் கூறப்பட்டது.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பிளவுபட்டால் வெற்றி இலக்கை நோக்கிப் பயணிக்க முடியாது, 51 வீதம் என்ற வாக்கு இலக்கை அடைய ஒன்றிணைந்தே பயணிக்க வேண்டும். ஒன்றிணைந்து இருந்தால் நிச்சயம் 51 வீதம் என்ற இலக்கை அடையலாம். தற்போதுள்ள 30 வீதத்தை 51 வீதமாக்க முடியுமா என்பது பற்றி பரிசீலிப்போம் என நான் கூறினேன். ஏனெனில் என்னிடம் சிறந்த வேலைத்திட்டம் உள்ளது.

எனது தனிப்பட்ட நோக்கங்களுக்காக அல்ல, நாட்டு மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முயற்சிக்கின்றேன். 5 வருடங்கள் என்பது, நாளொன்றுக்கு 8 மணிநேரம் என எடுத்துக்கொண்டால் 9 ஆயிரம் மணித்தியாலங்களே உள்ளன. அந்தக் காலப்பகுதிக்குள் நாட்டை மீட்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நான் பத்திரிகைகளில் பிரசாரம் செய்யவில்லை. அதுகூட ஒரு திட்டமிட்ட சதி நடவடிக்கையாக இருக்கக்கூடும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்துக்கும் தெரியப்படுத்தினேன்." - என்றார்.

## நாட்டில் ஜனநாயகத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"220 இலட்சம் மக்களின் வாழ்வுரிமைக்காக ஐக்கிய மக்கள் சக்தி வீதியில் இறங்கிய போது அரசை மையமாகக் கொண்ட பயங்கரவாதம், மிலேச்சத்தனம் மற்றும் தாக்குதல்கள் எம் மீது நடத்தப்பட்டன. நவீன இலங்கைக்கு இது பொருந்தாது. பேச்சுச் சுதந்திரம், அரசியல், பேரணி, வேலைநிறுத்தம் ஆகியவை ஒவ்வொருவரு குடிமகனின் உரிமை என்றாலும், நமது நாட்டில் ஜனநாயக ஆட்சிக்குப் பதிலாக சர்வாதிகார ஆட்சியே நடக்கின்றது

தற்போது, இலங்கையில் பொலிஸ் இராஜ்ஜியமே உள்ளது. அடக்குமுறை, துன்புறுத்தல் மற்றும் தாக்குதல்கள் பொதுவாக நடந்து வருகின்றன. மக்களின் பல்வேறு பிரச்சினைகளை உடல் ரீதியான பாதிப்பு மற்றும் வன்முறைக் கும்பல் தாக்குதல்கள் மூலம் தீர்வுகளைத் தேடுவதாக இருக்கக் கூடாது. மாறாக பேச்சுவார்த்தை, சமரசம், புரிந்துணர்வு மற்றும் உடன்படிக்கை வாயிலாக தீர்வை அணுகுவது உகந்தது."

- என்றார்.

## இணையம், தொலைபேசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காக, போதைப்பொருள் வர்த்தகர்கள் இணையம் மற்றும் தொலைபேசியினை அதிகளவில் பயன்படுத்துவது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.



# ஸ்ரீவிக்ரமராஜசிங்கன் மன்னனின் 192 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

## கண்டி ஸ்ரீநாத ஆலயத்தில் தானம், விசேட பூஜைகள்

இலங்கையின் இறுதி மன்னரான கண்டி ராஜ்ஜியத்தை ஆண்ட ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் 192 நினைவு தினத்தை முன்னிட்டு, தானம் மற்றும் விசேட பூஜைகள் வரலாற்று சிறப்புமிக்க கண்டி ஸ்ரீநாத ஆலயத்தில் நடைபெற்றது.

இலங்கையை ஆட்சி செய்த இறுதி மன்னரான ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் 1815 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்ட பின்னர் தமிழ் நாட்டின் வேலூருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்குள்ள கோட்டையில் சிறை வைக் கப்பட்டார்.

சிறையில் வைக்கப்பட்டிருந்த அவர் 1832 ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி உயிரிழந்தார். அதனை நினைவு கூரும் வகையில் இந்த சமய நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் உறவு முறை பரம்பரையை சேர்ந்த தற்போது திருகோணமலை மற்றும் கண்டியில் வசித்து வரும், மோகன் பேரின்பநாயகம், அருண் செல்வராஜ், என். சண்முகராஜா, ரமேஷ் சுப்ரமணியம்,என். ஞானேஸ்வரன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.

ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் உறவினர்கள் தமிழகத்தின் வேலூர் உள்ளிட்ட பிரதேசங்களிலும் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொக்கட்டிச்சோலை வாவிக்கரையில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை!

## கோடா, 25 பீப்பாக்கள் உட்பட உபகரணங்கள் மீட்பு




( கனகராசா சரவணன்)

யுத்தி நடவடிக்கையில் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள முனைக்காடு வாவிக்கரையில் பாரிய சட்டவிரோ கசிப்பு உற்பத்தி நிலையத்தை கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முற்றுகையிட்டனர். கசிப்பு உற்பத்தியல் ஈடுபட்டவர்கள் தப்பி ஓடிய நிலையில் கோடா 25 பீப்பாய்கள் மற்றும் உபகரணங்களைத் தாங்கள் கைப்பற்றியுள்ளனர் எனக் கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பலர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர் என மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைத்ததையடுத்து சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ.எதிரிமான்னவின் வழிகாட்டலில் மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி டி.எஸ்.எஸ்.கே. தெலங்காவலகே தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவதினம் இரவு மேற்படி வாவிக்கரை பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

அங்கு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரைக் கண்டு தப்பி ஓடிய நிலையில் அங்கிருந்து பெருமளவான கோடா மற்றும் 25 பீப்பாய்கள், கசிப்பு உற்பத்தி உபகரணங்களை மீட்கப்பட்டன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பெரும் சட்ட குழப்பம்?

பல்வேறு உள்ளூர் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள், மேற்கு நாடுகள், பொது நிறுவனங்கள், அரசியல் தரப்புகள் என்று பல மட்டங்களில் இருந்தும் முன்வைக்கப்பட்ட கடும் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல், அவற்றை மீறி, நிகழ்நிலை (ஒன்லைன்) காப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் முன்நகர்த்தி,அது நிறைவேற்றப்பட்டதாக இலங்கை அரசு அறிவித்திருக்கின்றது. அந்தச் சட்டமூலத்தில் அது முறைப்படி நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் சான்றளித்து விட்டார்.

அதனால் நேற்று முதல் நிகழ்நிலை காப்புச் சட்டம் நாட்டில் நடைமுறைக்கு வந்துள்ளது.

பல தரப்பினரின் எதிர்ப்புக்கு மத்தியில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள இந்தச் சட்டம் சுதந்திரமான கருத்துரிமைக்கும், புத்தாக்கத்துக்கும், தனியுரிமைக்கும் இடையூறாக இருக்கும் என அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில்கொழும்பில்இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சாங் -

“இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டம் குறித்து அமெரிக்கா கவலையடைந்துள்ளது.

“இந்தச் சட்டம் வெளிப்படைத்தன்மை இல்லாமல் தயாரிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் உருவாக்கப் பணியில் சமூக ஆர்வலர்கள் அல்லது துறைசார் நிறுவனங்கள் மற்றும் பிரிதிநிதிகளின் பங்களிப்பு உருவாங்கப்படவில்லை.

“எழுபது வீதத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் இந்தச் சட்டம் பற்றி அறிந்திருக்கவில்லை. கூகுள், மெட்டா, பேஸ்புக் போன்ற நிறுவனங்களை உள்ளடக்கிய கூட்டமைப்பு, இந்தச் சட்டம் அமுல்படுத்த முடியாத ஒரும் சட்டம் எனக் கூறியுள்ளன.

“இணையக் குற்றங்களைத் தடுப்பதற்குப் பதிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கம், ஜனநாயகக் கொள்கைகளுக்கு எதிரான படையெடுப்பாகவே கருத முடியும்.“ எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால், இந்தச் சட்டம் புதிய சட்டச் சிக்கல்களை - பிரச்சினைகளை-பெரும்குழப்பங்களை-கொண்டு வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சமயத்தில் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அவற்றை விசாரணை செய்த உயர்நீதிமன்றம் இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் அதில் 34 விடயங்களில் திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்திருந்தது.

நாடாளுமன்றத்தில் இச்சட்ட மூலம் தொடர்பான குழுநிலை ஆய்வில், இந்தத் திருத்தங்கள் தொடர்பான விடயங்கள் சரியாக செய்யப்பட்டுள்ளனவா என்பதை ஆற அமர இருந்து ஆராய்வதற்குக் கால அவகாசம் வழங்காமல், தனக்கு நாடாளுமன்றத்தில் இருந்த பெரும்பான்மையை வைத்து அரசு அதை நிறைவேற்றி விட்டது. சட்டமூலம் நாடாளுமன்றத்தில் உரிய முறைப்படி நிறைவேற்றப்பட்டு விட்டதாக அறிவித்து சபாநாயகர் அதில் சான்றளித்து ஒப்பமிட, அது நேற்று முதல் சட்டமுமாகிவிட்டது.

ஆனால், உயர் நீதிமன்றம் அந்தச் சட்டமூலத்தின் மூல வடிவத்தில் செய்யப்பட வேண்டியவை என்று குறிப்பிட்ட திருத்தங்களில் சில செய்யப்படாமலேயே அதுநாடாளுமன்றத்தில்சாதாரணபெரும்பான்மை மூலம் அங்கீகரித்து நிறைவேற்றப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

இன்னமும் சரியான உண்மை நிலை உறுதிப்படுத்தப்படவில்லை. சட்டமூலத்தின் மூல வடிவம், அது தொடர்பான உயர்நீதிமன்றின் வழிகாட்டல் தீர்ப்பு, இவ்விடயம் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தின் ஹன்சாட் பதிவுகள், கடைசியாக சபாநாயகர் சான்றளித்த நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் சரியான வடிவம் ஆகியவற்றை சட்டவட்டாரங்கள் பெற்று, ஆய்வுக்கு உட்படுத்தினால்தான் உண்மை நிலை உறுதிப்படுத்தப்பட முடியும்.

அப்படி உயர்நீதிமன்றம் காட்டிய வழிகாட்டல் சரியாகப் பின்பற்றப்படாமல் சட்டத்தில் சபாநாயகர் சான்றளித்திருந்தால் அதனால் தீர்க்க முடியாத பெரும் அரசமைப்புக் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

உயர்நீதிமன்ற வழிகாட்டல் பிரகாரமே எந்தச் சட்டமூலமும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அரசமைப்பின் ஒரு பிரிவு கூறுகின்றது.

அதேசமயம் சட்டமூலம் ஒன்றில் சபாநாயகர் சான்றளித்து ஒப்பமிட்டு அது சட்டமாகிய பின்னர் அந்தச் சட்டத்தின் செல்லுபடி தன்மை குறித்து உயர் நீதிமன்றம் விசாரிக்க முடியாது என இன்னொரு பிரிவு கூறுகின்றது.

இந்த இரண்டு முரண்நிலைக்கும் நடுவில் இப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படும் என்பதை இனித்தான் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

சபாநாயகர்சான்றளித்தசட்டத்தின்மூல வடிவம், சட்ட வட்டாரங்களின் கைகளுக்கு இன்று கிடைத்த பின்னரே இந்தச் சட்டச் சிக்கலின் நெருக்கடி குறித்து உறுதிப்படுத்த முடியும்.

# மத்திய வரவு - செலவு திட்டத்தில் தமிழகம் திட்டமிட்டு புறக்கணிப்பு

## முதல்வர் ஸ்டாலின் கவலை





“தமிழக மக்கள் நலனை முழுமையாகப் புறக்கணித்து, தமிழக வளர்ச்சியில் அக்கறை இல்லாமல் ஒரு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அளித்துள்ளார் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழகம் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளது.”

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்து பத்தாண்டு காலம் ஆட்சி செய்து, சொல்லிக்கொள்ள எந்தச் சாதனையும் செய்யாத பா.ஜ.க. அரசு, ஆட்சிக் காலத்தையும் முடித்து விடைபெறும் நேரத்தில் இடைக்கால நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளது. எடை போட்டுப் பார்க்க ஏதுமில்லாத வெற்று அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

கடந்த காலச் சாதனைகளையும் இந்த நிதிநிலை அறிக்கை சொல்லவில்லை.நிகழ்காலப்பிரச்சினைகளுக்குதீர்வுகாண்பதாகவும் இது அமையவில்லை. எதிர்காலப் பயன்களுக்கு உத்தரவாதம் தருவதாகவும் இல்லை. மொத்தத்தில், ஏதுமற்ற அறிக்கையை வாசித்தளித்திருக்கிறார் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

ஆட்சிக் காலம் முடியப் போகிறது என்ற அலட்சியம்தான் இந்த அறிக்கையில் தெரிகிறது. நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருவதால் பல்வேறு சலுகைகளைப் பொதுமக்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். பெட்ரோல், டீசல், சிலிண்டர் ஆகியவற்றின் விலைக்குறைப்பு இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், பொதுமக்களுக்கு ஏமாற்றத்தையே பரிசளித்துள்ளது இந்த நிதிநிலை அறிக்கை.

ஒவ்வொரு ஆண்டும் மத்திய வரிகள் மீது கூடுதல்வரிகள் மற்றும் மேல் கட்டணமாக சுமார் 7.5 லட்சம் கோடி ரூபாயினை மத்திய அரசு தொடர்ந்து வசூலித்து வருகிறது. இதனால் மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்கை மத்திய அரசு தொடர்ந்து பறித்து வருகிறது. கூடுதல் வரி மற்றும் மேல் கட்டணங்களை மாநிலங்களுடன் பகிர வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தியும் மத்திய அரசு கூட்டாட்சித் தத்துவத்துக்கு முரணாகச் செயல்பட்டு வருவது கண்டனத்திற்குரியது.

இந்த நிதிநிலை அறிக்கையில் தமிழகம் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. பத்தாண்டு காலத்தில் பதினைந்து எய்ம்ஸ் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் சொல்லி இருக்கிறார். 2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டு, 2019 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடியால் அடிக்கல் நாட்டப்பட்ட மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை 2024 வரைக்கும் கட்டுமானப் பணிகள் கூட நடக்காமல் கிடக்கிறதே. என்ன காரணம்? இந்தியாவின் மற்ற மாநிலங்களில் எல்லாம் எய்ம்ஸ் அமைத்தவர்கள், தமிழகத்தில் மட்டும் அமைக்காமல் போனதற்கு என்ன காரணம்? தமிழகத்துக்கு மட்டும் ஏன் இந்த ஓரவஞ்சனை? தமிழக மக்கள் இளித்தவாயர்களா? பா.ஜ.கவுக்கு தமிழ்நாட்டில் ஓட்டு இல்லை என்பதுதான் காரணமா?

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளப் புதிய திட்டங்களை மத்திய அரசு அறிமுகப்படுத்தும் என்று நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். ஆனால் தமிழ்நாடு அண்மையில் சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகளைச் சீரமைக்க இதுவரை எந்தவொரு நிதியும் வழங்கப்படவில்லை என்பது தமிழ்நாட்டு மக்களையே ஒட்டுமொத்தமாக ஏமாற்றுவதாகும்.” – என்றார்.

# 34 ஆண்டுகள் ஆகியும் ஆட்சிக்கு வரமுடியவில்லை: பா.ம.க. சிறப்பு பொதுக்குழுவில் அன்புமணி ஆதங்கம்



“தி.மு.க. தொடங்கி 18 ஆண்டுகளில் ஆட்சிக்கு வருகிறார்கள். அ.தி.மு.க. தொடங்கி 5 ஆண்டுகளில் ஆட்சிக்கு வருகிறார்கள். ஆனால், பா.ம.க. தொடங்கி 34 ஆண்டுகள் ஆகிறது. இன்னும் நாம் ஆட்சிக்கு வரமுடியவில்லை. இன்னும் நாம் கூட்டணி என்று பேசிக் கொண்டிருக்கிறோம். இது எப்போது மாறும்?”

– இவ்வாறு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று பா.ம.க. சிறப்பு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் உரையாற்றுகையில்,

“ஒரு கட்சியினுடைய வெற்றியை எப்படி நிர்ணயம் செய்வது? எப்படி எடை போடுவது? சிறந்த கொள்கை, அதிகமான இளைஞர்களைக் கொண்டது, அதிகமான போராட்டங்களைச் செய்த கட்சி, தொலைநோக்கு திட்டங்கள் அதிகமாக கொண்டு கட்சி என்றால் அது பா.ம.க.தான். ஆனால், ஒரு கட்சியினுடைய வெற்றி எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது. அக்கட்சியில் உள்ள எம்.பி. மற்றும் எம்.எல்.ஏக்களை வைத்துதான் நிர்ணயம் செய்யப்படுகிறது. அதற்காகத்தான், நாம் அரசியல் தேர்தலில் வெற்றி பெற வேண்டும்.

மக்கள் மனதில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால், ஆட்சியதிகாரம் வந்தால்தான், மக்களும், ஊடகங்களும் அப்போதுதான் முதன்மையான கட்சி என்று கூறுவார்கள். தமிழ்நாட்டில் இரண்டு கட்சிகள் 56 ஆண்டு காலம் ஆட்சி செய்து வருகின்றன. அவர்களை விட அதிக தகுதியும், திறமையும், தொலைநோக்குப் பார்வையும் கொண்ட கட்சி பா.ம.க. கட்சியின் நிறுவனர் ராமதாஸ் 44 ஆண்டு காலமாக, அடித்தள மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார். இதுபோன்ற உழைப்பை இந்தியாவில் உள்ள வேறு எந்த தலைவர்களும் செய்தது கிடையாது.

தி.மு.க. தொடங்கி 18 ஆண்டுகளில் ஆட்சிக்கு வருகிறார்கள். 1949 இல் கட்சியைத் தொடங்கி, 1967 இல் ஆட்சிக்கு வருகிறார்கள். அ.தி.மு.க. தொடங்கி 5 ஆண்டுகளில் ஆட்சிக்கு வருகிறார்கள். 72 இல் தொடங்கி, 1977 இல் ஆட்சிக்கு வருகிறார். ஆனால், பா.ம.க. தொடங்கி 34 ஆண்டுகள் ஆகிறது. இன்னும் நாம் ஆட்சிக்கு வரமுடியவில்லை. இன்னும் நாம் கூட்டணி என்று பேசிக் கொண்டிருக்கிறோம். இது எப்போது மாறும்?. மக்களின் மனநிலை மாறிக் கொண்டிருக்கிறது, அதை அனைவரும் சேர்ந்து கொண்டு வரவேண்டும்.” – என்றார்.

# பாகிஸ்தானில் தேர்தல் வேட்பாளர் மர்ம நபர்களால் சுட்டுக் கொலை!





பாகிஸ்தானில் எதிர்வரும் 8 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், அதில் போட்டியிடவிருந்த வேட்பாளர் ஒருவர் மர்ம நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் உள்ள பஜார் என்ற பழங்குடியின மாவட்டத்தில் சுயேட்சை வேட்பாளராகக் களமிறங்கிய 'ரெஹான் ஜெப் கான்' என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை, மர்ம நபர்கள் நடத்திய தாக்குதலில் அவருடன் இருந்த 4 உதவியாளர்களும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ரெஹான் ஜெப் கானுக்கு முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் கட்சி ஆதரவு வழங்கியிருந்தது.

ஊழல் வழக்கு ஒன்றில், இம்ரான் கான் மற்றும் அவருடைய மனைவி பூஷ்ரா ஆகியோருக்கு, 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு யாரும் பொறுப்பேற்கவில்லை. எல்லைப் பகுதியின் இருபுறத்திலும் இஸ்லாமிய அமைப்பினர் உள்ளனர். எனினும், தாக்குதலை நடத்தியது யார் என்று தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பெல்ஜிய தலைநகர் பிரசல்ஸ்சில் விவசாயிகள் எதிர்ப்பு போராட்டம்









ஐரோப்பிய ஒன்றியத்தின் விவசாய விதிகளுக்கு எதிராக பெல்ஜிய தலைநகர் பிரசல்ஸ்சில் விவசாயிகள் பாரிய எதிர்ப்பு பேரணியை முன்னெடுத்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய மாநாடு நடைபெறும் நிலையில், பிரசல்ஸ் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை முற்றுகையிட்டு முடக்கும் நோக்குடன் அவர்கள் இந்த பேரணியை நடத்திவருகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டை முன்னிட்டு பிரசல்ஸ்சில் உள்ள சுரங்கப் பாதைகள் மற்றும் நகரில் உள்ள பல வீதிகள் மூடப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்காரணமாக ஏற்கனவே போக்குவரத்து தாமதங்கள் காணப்படும் நிலையில், விவசாயிகளின் போராட்டம் இந்த நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

ஐரோப்பிய நாடாளுமன்ற வளாகம் அமைந்துள்ள பகுதியை சூழ ஆயிரத்து 300 வரையான விவசாய கனரக வாகனங்கள் அணி வகுத்துள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் தடைகளை தகர்த்து ஐரோப்பிய நாடாளுமன்றம் நோக்கி செல்வதற்கு நேற்று விவசாயிகள் முயன்றுள்ளனர்.

இதன்போது பொலிஸார் விவசாயிகள் மீது நீர்த் தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். ஆர்ப்பாட்டகாரர்கள் பதிலுக்கு முட்டைகள், மதுபான போத்தல்கள், எரிகுண்டுகளை வீசியும் டயர்களை எரித்தும் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன்காரணமாக நாடாளுமன்ற வளாகத்தை சூழவுள்ள அனைத்துப் பகுதிகளிலும் தீ எரியும் அதேவேளை கரும்புகையும் பரவியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

குப்பைகள் மற்றும் தீப் பிழம்புகளுக்கு நடுவே பெல்ஜியத்தின் உருக்கு தொழில்துறையின் முன்னோடியாகவும் முக்கிய தொழிலதிபராகவும் கருதப்படும் ஜோன் கொக்கறல்லின் சிலையின் ஒரு பகுதி உடைந்து வீழ்ந்து கிடக்கும் காட்சிகளும் வெளியாகியுள்ளன.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், மிகக் கடுமையான ஐரோப்பிய விதிகள், உற்பத்தி பொருள்களுக்கான குறைந்த விலைகள் மற்றும் நிர்வாகச் சுமை உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி விவசாயிகள் இந்த எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.



# திருகேதீஸ்வரம் மகா சிவராத்திரி விழா குறித்து மன்னார் செயலகத்தில் முன்னாயத்தக் கூட்டம்!

**(மன்னார் நிருபர்)**

மன்னார் திருகேதீஸ்வரம் ஆலயத்தின் மகா சிவராத்திரி விழா தொடர்பாக முன்னாயத்த கூட்டம் நேற்று முன்தினம் மாலை மன்னார் மாவட்ட செயலக பழைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் திருகேதீஸ்வர ஆலயத் தலைவர், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி), மன்னார் நகரப் பிரதேச செயலாளர், அரசாங்க உயர் அதிகாரிகள், இராணுவ மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள், கலாச்சார உத்தியோகத்தர்கள், மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி நடைபெற உள்ள மகா சிவராத்திரி விழா மற்றும் அன்றையதினம் ஆலயத்துக்கு வருகை தர உள்ள பல லட்சக்கணக்கான பத்தர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பது தொடர்பான பல்வேறு விடயங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு முக்கிய முடிவுகள் நிறைவேற்றப்பட்டன.

விசேட பஸ் சேவை நடத்துதல், உணவு வசதிகளை வழங்குதல், குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், மருத்துவ வசதிகளை வழங்குதல், ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு பாதுகாப்பு வசதிகளை செய்துகொடுத்தல் ஆகியன தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.









# பேராதனைப் பல்கலையில் தைப்பொங்கல் விழா















பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவபீட மாணவர்கள் அண்மையில் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் தைப்பொங்கல் தின விழாவை நடாத்திய போது எடுக்கப்பட்ட படங்கள்

**(படங்கள்:- வி.ரி.சகாதேவராஜா)**





# ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பில் அவரின் ஊடகப் பிரிவு அறிக்கை வெளியீடு

பொலிஸ் மா அதிபரின் நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு அரசமைப்புப் பேரவை மற்றும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பில் விடயங்களை தெளிவுபடுத்தி ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் ஊடக அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

“ஜனாதிபதி மற்றும் அரசமைப்புப் பேரவையின் அரசமைப்பு ரீதியான பொறுப்பை நிறைவேற்றுதல்“ என்ற தலைப்பில் இந்த ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் மூலம் நிறுவப்பட்ட நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தலைமையிலான அரசமைப்புப் பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியாக செயற்படுவதாகவும், ஜனாதிபதி அரசமைப்பிற்கு அமைவான பணிகளை முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்பையும் அரசமைப்புப் பேரவை வழங்குவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அரசமைப்பிற்கு அமைவான தனது பணிகளை முன்னெடுப்பதற்கு செய்யப்படும் எந்தவொரு இடையூறுகளும் அரசமைப்பு மீறலாகவே கருதப்படும் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

“அரசமைப்பின் 4(ஆ) உறுப்புரையின் கீழ் இலங்கை ஜனநாயக குடியரசின் ஜனாதிபதி, இலங்கையின் தேசிய பாதுகாப்பு உட்பட மக்களின் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துகிறார். இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பான அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, நிறைவேற்று அதிகாரத்தின் பிரதானி என்ற வகையில், அரசமைப்பில் குறிக்கப்பட்டுள்ள நடைமுறைக்கு அமையவும் ஜனாதிபதியின் அரசமைப்பு ரீதியான பொறுப்பிற்கு அமையவும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட உயர் அரசாங்க பதவிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கு அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதி கடமைப்பட்டுள்ளார்.

எனவே, ஜனாதிபதி தனது அரசமைப்பு ரீதியான கடமைகளை எந்தவித இடையூறும் அல்லது தடைகளும் இன்றி செய்ய வேண்டும். அரசமைப்பின் 41(ஈ) உறுப்புரையின் கீழ், பொலிஸ்மா அதிபரின் நியமனம், ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட சிபாரிசுக்கு அரசமைப்புப் பேரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னரே மேற்கொள்ளப்படுகிறது.

அரசமைப்புக்கு அமைவான ஜனாதிபதியின் பணிகளை முன்னெடுப்பதற்கு செய்யப்படும் எந்தவொரு இடையூறும் அரசமைப்பு மீறலாகவே கருதப்படும். ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அரசமைப்புக்கு முரணாக தனது அதிகாரங்களைப் பயன்படுத்தினால், அதற்கான நடவடிக்கைகளும் அரசமைப்பிலேயே வழங்கப்பட்டுள்ளன.” – என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, அரசமைப்பு பேரவையானது அரசமைப்பிற்கு அமைவாகத் தனது கடமைகளை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 41(ஈ) உறுப்புரையின் பிரகாரம், பொலிஸ் மா அதிபரை நியமிப்பது தொடர்பான தனது கடமையை மேற்கொள்ளாமல் தவிர்க்குமாறு அரசமைப்புப் பேரவைக்குப் பணிப்பது அரசமைப்பை மீறும் செயல் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் நாடாளுமன்றத்தின் பிரதானி என்பதுடன், அரசமைப்பிற்கமைய நாடாளுமன்றத்தினால் நீதிமன்றத்தின் ஊடாக மக்களின் நீதிமன்ற அதிகாரம் செயற்படுத்தப்படுவதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, நாடாளுமன்றம் மக்களுக்கு மாத்திரமே பொறுப்புக்கூற வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## சிறீதரன் - பிரிட்டிஷ் தூதர் சந்திப்பு

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிறீதரனை இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பெட்ரிக் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்புக் குறித்து பிரித்தானிய உயர்ஸ்தானிகர் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:–

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சிறீதரனுடனான சந்திப்பு ஒரு பயனுள்ளதாக அமைந்தது.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் சமூகத்திற்குள் காணப்படும் முக்கிய விடயங்கள் குறித்து நாம் இருவரும் கலந்துரையாடினோம். – என்று குறிப்பிட்டுள்ளார்.



# புதிய உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் மூவர் நன்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்



இலங்கைக்குப் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் புதிய உயர்ஸதானிகர்கள் மற்றும் தூதுவர்கள் மூவர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்.

எசுவாத்தினி இராஜ்ஜியத்தின் உயர்ஸ்தானிகர், கிரிகிஸ், ருமேனியா, துர்க்மெனிஸ்தான் நாடுகளின் புதிய தூதுவர்களே இவ்வாறு புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.

எசுவாத்தினி இராஜ்ஜியத்தின் உயர்ஸ்தானிகர் மென்சி சிபோ டிலாமினி, ருமேனியா தூதுவர் ஸ்டெலுடா அர்ஹைர், கிரிகிஸ் குடியரசின் தூதுவர் அஸ்கர் பெஷிமோவ், துர்க்மெனிஸ்தானின் தூதுவர் ஷலர் கெல்டினசரோவ் ஆகியோர் நற்சான்றுப் பத்திரங்களை கையளித்தனர்.

இந்த நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

அதனையடுத்து, நேற்று நியமனம் பெற்ற உயர்ஸ்தானிகரும் தூதுவர்களும் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.





# ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை

## வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவிப்பு



”ஜனாதிபதியின் வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் தொடர்பில் சிலரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. இலங்கை தனிமைப்படுத்தப்பட்ட தீவாக இருக்க முடியாது. நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்ல வேண்டுமாயின் வெளிநாட்டு தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்வதும், புதிய வெளிநாட்டு உறவுளை ஏற்படுத்தகொள்வதும்ம் அவசியம்.”

– இவ்வாறு வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிநாட்டு அமைச்சர் ஆகியோர் சுவிட்சர்லாந்து டாவோஸ் நகரில் நடைபெற்ற உலக பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சென்றிருந்தனர். அங்கு வர்த்தகச் சமூகத்தையும் சந்தித்தனர். இலங்கையை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பிலான தீர்க்கமான பேச்சுக்களை முன்னெடுத்திருந்தனர். இலங்கைக்கு முதலீட்டாளர்களை அழைத்து வருவது தொடர்பிலான பேச்சுக்களையும் முன்னெடுத்திருந்தனர்.

அதேபோல், உகண்டாவின் கம்பாலா நகரில் நடைபெற்ற அணிசேரா மாநாட்டில் உலகின் செல்வந்த நாடுகளுடன் செயலாற்றும் விதம் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். 2050 உலக பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில் இலங்கை பொருளாதாரத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்தும் கலந்துரையாடியிருந்தார்.

பின்னர் ஜி77 மற்றும் சீன தென் துருவ மாநாட்டில் பங்கேற்றிருந்த ஜனாதிபதி காலநிலை அனர்த்தங்கள் மற்றும் தொற்றுநோய் நிலைமைகளுக்கு எவ்வாறு முகம்கொடுக்கலாம் என்பது தொடர்பில் கலந்துரையாடினார். அந்த நிலைமை எம்மை போன்ற நாடுகளை பாதிக்கும் விதம் மற்றும் அந்த நேரத்தில் பொருளாதாரத்தை செயற்படுத்த வேண்டிய முறைமை தொடர்பிலும் கலந்தாலோசித்தார். பசுமை பொருளாதாரத்திற்கான மாற்றம் தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் ஆதாரமற்றவையாகும். இவ்வாறான சர்வதேச மாநாடுகளில் பங்கேற்பதால் எமக்கும் உலக நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை பலப்படுத்திக்கொள்வதோடு, புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் முடியும். அரசியல் தலைவர்கள் தனியார் துறையினருடன் கலந்துரையாடி வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் இணைந்து அபிவிருத்திச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கான இயலுமையும் அதனால் கிடைக்கும்.

அதேபோல் அணிசேரா கொள்கையை மேலும் உறுதிபடுத்துவதாகவும் அந்த சுற்றுப்பயணம் அமைந்திருந்தது. உக்ரைன் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் மோதல்கள் ஆசியாவின் மீது தாக்கம் செலுத்தாமல் இருப்பதற்கான முன்னெடுப்புக்கள் தொடர்பிலும் பேசப்பட்டதோடு, அரச தலைவர்களுடனான பேச்சுக்களின் பின்னர் உலகின் அமைதியை பேண முடியும்.

அதேபோல் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பிலும் மேலும் கலந்துரையாடப்பட்டதோடு, இலங்கைக்கு வருகை தருமாறு மற்றைய நாட்டுத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.” – என்றார்.



# சுகாதாரத் தொழிற்சங்கத்தினர் இன்றும் பணிப்புறக்கணிப்பில்!

72 சுகாதார தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்து வரும் பணிப்புறக் கணிப்பை இன்றைய தினமும் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கப்பாடு ஏற்படாததை அடுத்து, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என சுகாதார தொழிற்சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

வைத்தியர்களுக்கு வழங்கப்படவுள்ள 35 ஆயிரம் ரூபா போக்குவரத்து கொடுப்பனவை தமக்கும் வழங்க வேண்டும் எனக் கோரி சுகாதார தொழிற்சங்கத்தினர் நேற்று பணிப்புறக் கணிப்பை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக, நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதற்கமைய, நாடு முழுவதிலும் உள்ள 22 வைத்தியசாலைகளில், 600 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர் என இராணுவ ஊடக பிரிவு தெரிவித்தது.

இந்தநிலையில். குறித்த பணிப்புறக் கணிப்பு காரணமாக வைத்தியசாலைக்கு சென்ற நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

எவ்வாறாயினும், அனைத்து சிறுவர், புற்றுநோய் மற்றும் சிறுநீரக வைத்தியசாலைகளின் சேவைகள் வழமை போல் இடம்பெறும் என சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது.



# 'யுக்திய' சுற்றிவளைப்பில் மேலும் 878 சந்தேக கைது

யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 878 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக 649 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் குற்றப்பிரிவிற்கு அனுப்பப்பட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த சந்தேகநபர்களில் 229 பேரும் இந்த சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேநபர்களிடமிருந்து 130 கிராம் ஹெரோயின், 134 கிராம் ஐஸ், 1 கிலோகிராம் கஞ்சா உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட 06 சந்தேகநபர்கள் தடுத்து வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான நால்வர் புனர்வாழ்வு மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.02.2024

## மேஷம்

இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் பிரியமான ஒருவருடன் மோதல் ஏற்படலாம். இன்று சிறந்த பலன்களைக் காண நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

கடின உழைப்பின் மூலம்தான் வெற்றி காண முடியும். பணியிடத்தில் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டியது அவசியம்.

உங்கள் மனக்குழப்பத்தை உங்கள் துணையிடம் காண்பிக்காதீர்கள். அமைதியான மனநிலையில் இருப்பது சிறந்தது.

இன்று நிதிநிலை சராசரியாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது. அதற்கு நீங்கள் சிறு கடன்கள் வாங்குவீர்கள்.

## ரிஷபம்

நீங்கள் விருந்துகளில் கலந்து கொள்ள நேரலாம். மற்றும் உங்களுக்கு பிரியமானவர்களை உங்கள் வீட்டுக்கு அழைக்க நேரலாம். உங்கள் முயற்சியின் மூலம் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். என்றாலும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக இருக்க முயல்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நீங்கள் சிறிய கடன் வாக நேரலாம். மேலும் இழப்பு ஏற்படாமல் இருக்க சிறிது பணத்தை சேமியுங்கள்.

தாயின் உடல் நலத்துக்காகச் செலவு செய்வீர்கள். பெரிய அளவில் பாதிப்பு இருக்காது எனவே கவலை வேண்டாம்.

## மிதுனம்

உங்கள் வாழ்வில் சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் செயல்களை இன்று விரைந்து ஆற்றுவீர்கள்.

வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமாக நடந்து கொள்வீர்கள். அவருடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். நீங்கள் விரைந்து பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று துடிப்பாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

உங்கள் அணுகுமுறையில் வன்மையை தவிர்க்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். நிறைவேறாத உங்களின் லட்சியங்களுக்காக வருந்த வேண்டாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சிறப்பாக திட்டமிட்டால் முன்னேற்றம் காணலாம்.

நட்பான அணுகுமுறை மற்றும் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையுடனான நட்பை இனிமையாக்கலாம்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் செலவுகளை கண்காணியுங்கள்.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.

## சிம்மம்

உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். இன்று வெற்றி காண்பதற்கு முறையாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை முடித்து ஒப்படைப்பதற்கு முன் கவனமாக சரி பார்க்க வேண்டும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். ஆனால் பூர்வீகச் சொத்து அல்லது எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. அதிகப் பணிகள் காரணமாக தலைவலி ஏற்படலாம்.

## கன்னி

இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். எந்தச் செயலிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவதற்கு நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அனாவசியமாக பணம் செலவாகாமல் காத்துக் கொள்ளுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம். காயம் ஏற்படாமல் இருக்க வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்க வேண்டும்.

## துலாம்

தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் வெற்றி காணலாம். உங்கள் நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்று நீங்கள் சிறப்பாக செயல்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

அதிர்ஷ்டம் காரணமாக ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் இன்று பண வரவு ஏற்படும்.

இன்று நிறைந்த ஆற்றலுடன் இருப்பீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் உங்கள் லட்சியங்களை அடையலாம். சிறந்த பலனைக் காண இன்று கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் செயற்றிறன் சிறப்பாக இருந்-தாலும் நீங்கள் முழு திருப்தியடைய மாட்டீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதலை அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.02.2024




இன்று சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். பிறருடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் தொடர்பாடலை கட்டுப்படுத்த வேண்டும்.

அதிக பதட்டம் காரணமாக பணியின் போது தவறுகள் செய்தது போல உணர்வீர்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரும் நல்ல புரிந்துணர்வையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்களால் இன்று பணம் சம்பாதிக்க இயலும். என்றாலும் வீணான செலவு காரணமாக நீங்கள் சேமிக்க இயலாது.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும்.




உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும். மதிப்பு மிக்க பொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

செரிமானம் மற்றும் கண் சம்பந்தமாக பிரச்சினைகள் இன்று காணப்படும்.




பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்கமுடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. ஆனால் நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாக உற்சாகமாக இருப்பீர்கள். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.

உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.





